1987 எப்ரல் 8]

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பால் சோதனையிடப்படுவது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? தனியார் விற்பனை செய்கின்ற பாலில் சுத்தமான வெண்ணெயை எடுத்துவிட்டு, தற்போது விற்பனையை செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் வாங்குகிற பாலின் தரம் சோதனை செய்யப்படுகிறது. ஆனால் தனியார்கள் பாலில் வெண்ணெயை எடுத்துவிட்டு விற்பதை சில மாவட்டங்களில் தொழிலாக நடத்துகிறார்கள். அவர்கள் விற்கிறபோது, வெண்ணெய் எடுத்த பால் என்று சொல்லி விற்பதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலாது.

திருவண்ணாமலைத் தொகுதி கீழ்நாத்தூரில் சார்பதிவாளர் அலுவலகம்.

206—(*வினா எண். 5655) திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலைத் தொகுதி, கீழ்நாத்தூர் கிராமத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் துவங்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைத் தொகுதி, கீழ்நாத்தூர் கிராமத்தில் சார்பதிவகம் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல் நாடுகளில் இருப்பதைப்போல சார் பதிவாளர் அலுவலகங்களில் ரூபாய் 500-க்கு மேற்பட்ட பிராமிசரி நோட்டுகளை ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போடும்படி தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதி, மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைக் கம்பெனி.

207—(*வினா எண் 5679) திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைக் கம்பெனி தேயிலையைப் பக்குவப்படுத்த அருகிலுள்ள அரசுக் காடுகளிலிருந்து விறகு எடுக்கின்றது என அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, (அ) புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் முன்பு நிறைய மரங்கள் வெட்டப்பட்டு, அது சம்பந்தமாக அரசுக்கு புகார் வந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டதற்குப் பின்பு, அந்த காட்டு இலாகா அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் பயனாக அந்தத் தவறுகள் குறைந்து இருக்கின்றன. இப்போது சில சில தவறுகள் நடப்பதாகத் தெரிகிறது. ஏன் என்றால் இந்தத் தேயிலையைப் பக்குவப்படுத்துவதற்கு அரசினுடைய பகுதியில் இருந்து விறகுகள் எடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். இதன் காரணமாக எஸ்டேட்டிற்கு கீழே இருக்கின்ற மணிமுத்தாறு அணை சமீப காலமாக நிரம்புவது இல்லை. காரணம், காடுகளில் மரங்களை வெட்டுகிற காரணத்தால் மழை குறைவாக இருக்கிறது. இதை எல்லாம் கவனத்தில் கொண்டு, மேலும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.